# <u>IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.</u>

## <u>Pr.OP.No.80/2023</u>

சாட்சி : PW– 3

பெயர் : திரு. பாலசுப்ரமணியன் தேதி : 05.06.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**<u>குறுக்குவிசாரணை</u>**:– (2, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

எதிர்மனுதாரர்களின் பெயர்கள் சக்திவேல், விஜயலட்சுமி, சிவகாமி, ரேவதி மற்றும் மங்கையர்கரசி ஆகும். மனுதாரர் தனியாகதான் வசித்து வருகிறார். மனுதாரர் கடந்த 5 வருடங்களாக தனியாக வசித்து வருகிறார். ராமு என்பவரும் தனியாக வசித்து வருகிறார். மனுதாரர் எவ்வாறு ஜீவனம் செய்து வருகிறார் என்பது பற்றி எனக்கு தெரியாது. உயில் எழுதி வைத்திருந்தது சம்மந்தமாக மனுதாரர் இந்த வழக்கு போட்டுள்ளார். 06.02.2020 தேதியில் உயில் எழுதப்பட்டது. ராமு என்பவர் எழுதி வைத்த சொத்து பூர்விக சொத்தா? என்று எனக்கு தெரியாது. மனுதாரருக்கு மொத்தம் 5 வாரிசுதாரர்கள் உள்ளனர். 2020 வருடம் நான் குடியிருந்த வீட்டிலிருந்து ராமு என்பவர் குடியிருந்த வீடு சுமார் 8 கி.மீ தூர இடைவெளியில் இருந்தது. சக்திவேல் என்னுடைய நண்பர் அல்ல. எனக்கு தனிப்பட்ட முறையில் சக்திவேல் என்பவருடன் பழக்கவழக்கம் இல்லை. ராமு என்பவர் தாதகாப்பட்டியில் இறந்தார். உயில் தாதகாப்பட்டியில் உள்ள சொத்து பற்றி எழுதப்பட்டுள்ளது. ஜங்சனில் உள்ள சொத்து அரசாங்கத்துக்கு பாத்தியப்பட்டது ஆகும். உயிலில் சாட்சி போட்ட மற்றொருவரின் வீடு என் வீட்டிலிருந்து சுமார் 4 வீடுகள் தள்ளி உள்ளது. நான் செல்லதுரை என்பவரை பார்த்தால் பேசுவேன். செல்லதுரை என்பவர் நான் குடியிருக்கும் தெருவில் குடியிருந்து வருகிறார். ராமு என்பவர் என்னை சாட்சி போட 5ம் தேதி அழைத்தார். என் முதல் விசாரணையில் எந்த தேதியில் சாட்சி போட அழைத்தார் என்பது பற்றி குறிப்பாக சொல்லவில்லை. உயில் மனுதாரருக்கு மட்டும் எழுதிவைக்கப்பட்டுள்ளது. உயில் எழுதிய சமயத்தில் மனுதாரர் அந்த

இடத்தில் இருக்கவில்லை. ராமு என்பவர் மனுதாரருக்கு தகவல் சொன்னாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. உயில் எழுதிய முத்திரைதாள் எங்கு வாங்கப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் உயில் குறித்து மனுதாரருக்கு தகவல் சொல்லவில்லை. மனுதாரருக்கு எழுத, படிக்க தெரியுமா என்பது பற்றி எனக்கு தெரியாது. உயில் பற்றி மனுதாரருக்கு எப்போது தெரியவந்தது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது என்னை தொடர்பு கொண்டார். உயில் தயார் செய்த போது அந்த இடத்தில் சக்திவேல் இல்லை. உயில் பற்றி மனுதாரருக்கு எப்படி தெரிந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே தட்டச்சு செய்து தயார் செய்த தாளில் நான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு யார் சென்றார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. பழைய மூல ஆவணத்தை வைத்து தான் உயில் தயார் செய்யப்பட்டது. நான் அந்த மூல ஆவணத்தை பார்த்தேன். எந்த வருடத்தில் யாரிடமிருந்து, சொத்து வாங்கப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் மூல ஆவணத்தை பார்த்திருந்தால் அதுபற்றி விவரங்கள் எனக்கு தெரிந்திருக்கும் என்றும், நான் மூல ஆவணத்தை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பழனியப்பன் என்பவர் உயில் சாசனத்தை தயார் செய்தார். நான் உயில் சாசனத்திற்கு முன்பு ராமு என்பவரின் கையெழுத்தை பார்த்ததில்லை. உயில் அனைவரிடமும் படித்து காட்டப்பட்டது. நான் கையெழுத்து போடுவதற்கு முன்பு உயில் சாசனத்தை படித்து பார்த்தேன். உயில் சாசனம் 5 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. நான் உயில் சாசனத்தில் ஒரு பக்கத்தில் கையெழுத்து போட்டேன். மனுதாரரும், சக்திவேல் என்பவரும் ஒரே வீட்டில் வசித்து வருகின்றனர் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. உயிலில் உள்ள மற்றொரு சாட்சி மனுதாரருக்கு தகவல் சொன்னாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. ராமு என்பவர் இறந்த சமயத்தில் அவரது மனைவியுடன் இருந்தார். மகன்கள் தனியாக வசித்து வந்தனர். உயில் எழுதிய போது ராமு என்பவருக்கு

வயது 65க்கு மேல் இருக்கும். ராமு என்பவர் மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிட்டார். ராமு என்பவரின் இறுதி சடங்கிற்கு நான் சென்றேன். இறுதி சடங்கின் போது நான் உயில் பற்றி பேசவில்லை. நான் உயிலில் சாட்சி கையெழுத்து போட்டபோது என்னுடைய ஆதார் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவைகளை அடையாளத்திற்காக எடுத்து சென்றேன். என்னுடைய அடையாள அட்டையை உயிலில் பதிவு செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ராமு என்பவரின் அடையாள அட்டையை ராமு கொண்டு வந்திருந்தாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய அடையாள அட்டையில் பதிவு செய்யப்பட்டதா என்பதை நான் கவனிக்கவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் உயிலை முழுவதுமாக படித்து பார்க்கவில்லை. அதனால் உயில் சாசனத்தில் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது என்ற வாசகம் குறிப்பாக உள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது. ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டால் குற்ற நடவடிக்கை எடுக்கப்படுவது பற்றி எனக்கு தெரியும். ராமு என்பவர் கொரோனா பாதிப்பால் இறந்தார் என்று சொன்னால் சரியல்ல. ராமு என்பவரை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்த்திருந்தனர். உயில் எழுதிய சமயத்தில் பெரியதாக கொரோனா தொற்று இல்லை. உயில் எழுதிய முத்திரைத்தாள் ஆத்தூர் தாலுகாவில் வாங்கப்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது. ராமு என்பவர் ரயில்வே துறையில் ஒப்பந்ததாராக வேலை செய்தார். மேலும் ராமு என்பவர் அரசு பேருந்தில் நடத்துனராக வேலை செய்தார். சக்திவேல் என்ன வேலை செய்கிறார் என்பது பற்றி எனக்கு தெரியாது. உயில் சாசனத்தை சக்திவேல் என்பவர் போலியாக தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. சக்திவேல் என்பவருடன் மனுதாரர் வசித்து வருகிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும், சக்திவேல் என்பவரும், செல்லதுரை என்பவரும் கூட்டாக சேர்ந்து போலியாக உயில் தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. போலி உயில் என தெரிந்தும் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல. என் முதல் விசாரணை ஆணையுறுதி ஆவணத்தில் நீதிமன்றத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். சொத்து விவரத்திற்காக கையெழுத்து போட்டேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி ஆவணம் என் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை.

**குறுக்குவிசாரணை (3 வது எதிர்மனுதாரர் தரப்பில்)**

3 வது எதிர்மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

Taken down by me in open Court and dictated to the Typist by me and read over to the deponent and acknowledged by him/her to be correct.

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.